புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# வரலாற்றில் உதயேந்திரம்

**முனைவர் ச. மணிமேகலை**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் – 635 601, திருப்பத்தூர் மாவட்டம்.*

*எந்த ஒரு நாட்டின் அல்லது ஓர் இடத்தில் அல்லது மக்களின் வரலாற்றை அறிவதற்கும் எழுதுவதற்கும் பல மூலங்கள் இருக்கின்றன. அவை கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், சிற்பங்கள், கட்டக்கலைகள, ஓவியங்கள், இலக்கியங்கள், வெளி நாட்டினர் பயணக் குறிப்புகள் மற்றும் ஓலைச்சுவடிகள் ஆகும். அந்த வகையில் தமிழ்நாட்டின் பல்லவர், சோழர் மற்றும் நாயக்கர், விஜயநகர பேரரசுகள் இவர்களின் வரலாற்றை எழுதுவதற்கும், அறிவதற்கும், வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் இத்தரவுகள் தேவைப்படுகின்றன.*

## உதயேந்திரம்

*உதயேந்திரம் என்ற இந்த ஊர் முன்னர் குடியாத்தம் வட்டத்தில் இருந்தது. தற்போது வாணியம்பாடி வட்டத்தில் ஓர் ஊராகத் திகழ்கிறது. வாணியம்பாடியும் உதயேந்திரமும் பாலாற்றின் கரைகளில் அமைந்த ஊர்களாகும். எனவே இந்த இரண்டு இடங்களும் செழுமை பெற்று, இன்றும் வளமுடன் விளங்குகின்றன. வேலூரிலிருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள உதயேந்திரம் பேரூராட்சிக்கு அருகில் அமைந்த தொடர் பேருந்து நிலையம் 3 கி.மீ தொலைவில் உள்ள வாணியம்பாடியில் உள்ளது. இதன் வடக்கில் ஆம்பூர் 18 கி.மீ, தெற்கில் திருப்பத்தூர் 26 கி.மீ தொலைவில் உள்ளது.*

## வரலாற்றில் உதயேந்திரம்

*பல்லவ அரசன் நந்தி வர்மன் பல்லவ மல்லனுடைய ஆட்சியின் 21 - ஆம் ஆண்டிலே அவனுடைய படைத் தலைவனும் பூசன் குலத்தில் பிறந்த வேகவதியின் கரையிலுள்ள வில்வல நகரத்து குருநில மன்னன் உதயேந்திர சிம்மன், வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் கிடைத்த உதயேந்திரம் செப்பேடுகள் வாயிலாக இம்மன்னன் குறித்து அறியமுடிகிறது. பல்லவ அரசன் நந்தி வர்மன் பல்லவ மல்லனுடைய ஆட்சியின் இருபத்தோராம் ஆண்டிலே அவனுடைய படைத் தலைவனும் பூசன் குலத்தில் பிறந்த வேகவதியின் கரையிலுள்ள வில்வல நகரத்து குரு நில மன்னன் உதயேந்திர சிம்மன். வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் கிடைத்த உதயேந்திரம் செப்பேடுகள்வ ஆகும்.உதயேந்திரன் செப்பேடுகளில் குறிக்ப்பெறும் உதயேந்திர சிம்மன் 'பூசன்' கூட்டத்தைச் சார்ந்தவராக இச்செப்பேடு கூறுகிறது. பூசன் மாற்றுத்துறை என்பது போர் முறைகளுள் ஒன்று.*

*உதயேந்திர சிம்மன் விண்ணப்பம் செய்ததைக் குறிப்பிடும் இடத்தில் அவன் தன் அரசனுக்கு ஆற்றிய பணிகளும் விரிவாகக் கூறப்படுகின்றன. எதிரிகளிடமிருந்து நாட்டை மீட்டுப் பல்லவ சிங்காதனத்தில் நந்திவர்மனை நிலைநிறுத்தியவன் அவனே.அவனுடைய வேண்டு கோளின்படி பச்சிமாச்சரிய நதி விஷயத்தில் குமாரமங்கல வெள்ளாட்டூர் என்ற கிராமத்தை, கொற்ற கிராமம் என்ற ஊரில் இரண்டு ஜலயந்திரங்களோடு, உதயசந்திரமங்கலம் என்று புதுப் பெயரிட்டு நூற்றெட்டுப் பிராம்மணர்களுக்கு அளித்த செய்தி காணப்படுகிறது. அளிக்கப்பெற்ற கிராமத்தின் நான்கு எல்லைகள் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.அதர்ம காரியங்களைச் செய்யும் வேற்றேரை நீக்கி, அந்த ஊர் அளிக்கப்பட்டது என்ற விவரமும் கூறப்பட்டுள்ளது.தானம் பெற்றவர்களின் விவரமும் விரிவாகக் காணப்படுகிறது. முடிவிலே, சந்திரன் நட்சத்திரம் உள்ளளவும்,வானத்திலே சூரியன் சுற்றும் வரையிலும், மலை உள்ளளவும் பூசன் வம்சம் நிலைத்திருக்க வேண்டும்மென்று வாழ்த்துக் கூறப்பட்டிருக்கிறது. மேதாவி குலத்தில் பிறந்த சந்திரதேவன் மகன் பரமேச்வரன் என்னும் கவி அந்தப் பிரசஸ்தியை எழுதியதாகக் கூறும் செய்தியோடு சாசனம் முடிவடைகிறது. உதயேந்திர சிம்மன் சிற்பம் டாக்டர் மீனக்ஷி "காஞ்சி வைகுண்டப்பெருமாள் கோயிலில் காணும் வரலாற்றுச் சிற்பங்கள்" என்ற தொல்லியல் அய்வு நூல்லில், உதயேந்திர சிம்மன் சிற்பம் விவரிக்கபட்டுள்ளது. 14-ஆம் கட்டத்தின் ஒரு பகுதியும் 15 - ஆம் கட்டம் முழுவதும் இந்த நிகழ்ச்சிகளை (ஆதாவது பல்லவ மல்லனை உதயேந்திர சிம்மன் நந்திபுரம் முற்றுகையிலிருந்து மீட்ட நிகழ்ச்சியை)ச் சித்திரிப்பவைகளாக உள்ளன. இவர்களுக்குப் பின்புறமாக மேலும் மூவர் நின்று கொண்டிருக்கிறார்கள்.அடிப் பகுதியில் முன் கட்டத்தைச் சேர்ந்த போர் வீரர்களில் ஐவர் அணிவகுத்துச் செல்வதே போல் உள்ளனர்.அழகனகவும் இளைஞனாகவும் குதிரை மீது அமர்ந்து செல்லும் அவ்வீரன் உதயேந்திர சிம்மன் போலும். போட்டியிடும் சித்திர மாயனுடைய சேனையை எதிர்த்துச் செல்வது போலக் காண்கிறான்.*

**உதயேந்திரத்தில் நடுகல்**

*வாணியம்பாடி வட்டம் உதயேந்திரம் என்ற ஊரில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த நடுகல் உள்ளது. இக்கல்லில் ஆண், பெண் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரே பலகையில் செதுக்கப்பட்டுள்ள இக்கல்லில் ஆணும் பெண்ணும் சேர்ந்த நிலையில் உள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆணின் உருவப் பொறிப்பில் வலதுபுற கொண்டையுடனும், முதுகிற்கு பின்னால் உறைவாளுடனும் காட்சி தருகின்றார். கழுத்தில் மணிகளால் ஆன ஆபரணம் மற்றும் காதில் குண்டலங்களும், வலது கையை பின்னால் கட்டிய நிலையில் அவ்வீரன் காட்சியளிக்கிறார்.*

**உடன்கட்டை நடுகல் (அ) சதி கல்**

*சங்க இலக்கியக் காலத்தில் பெண்கள் கணவன் இறந்தவுடன் சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கமானது கடைப்பிடிக்கப்பட்டுள்ளது இதனை,*

***"அணில் வரிக் கொடுங்காய்***
***வாள்போழ்ந்திட்ட காழ்போல்***
***நல்விளிர் நறுநெய் தீண்டாது"***

***(புறம். 246)***

*என்னும் பாடலடிகளில், மன்னன் பூதபாண்டியன் இறந்த பிறகு அவள் மனைவி பெருங்கோப்பெண்டு, பாடிய இப்பாடல் மூலம் கைம்மை நோன்பின் கொடுமை, பெயரளவில் உயிரோடு இருந்து நடைமுறையில் செத்துக் கொண்டிருக்கும், ஆதலால்தான் பெண்கள் கைம்மை கொடுமைக்குப் பயந்தே வாழ வேண்டும் என்ற ஆசையே விட்டுப் போனது. இதனாலேயே பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை விரும்பி ஏற்றுக்கொண்டனர். ஆனால் ஆண்கள் யாரும் உடன்கட்டை ஏறியதாக சான்றுகள் இல்லை.*

*உதயேந்திரம் பகுதியில் உள்ள இந்நடுகல் ஒரு உடன்கட்டை நடுகல்லாக இருக்கலாம். வீரனுடன் அவனது மனைவியும் வலது கையில் தண்ணீர் குவளையுடன் வலது புற கொண்டையிட்டும், கழுத்தில் ஆபரணத்தையும், இரண்டு காதுகளிலும் குண்டலங்கள் காட்சியளிக்கின்றன. வீரன் போருக்கு செல்வது போன்றும், அவனுக்கு உதவியாக அவ்வீரனின் மனைவியும் உடன் சென்றுள்ளாள் என்பதை விளக்கும் வகையில் இந்நடுகல் அமைந்துள்ளது. உதயேந்திரம் ஊரை சேர்ந்த மக்கள் இந்நடுகலை உண்டாலம்மன் என்ற பெயரில் வழிபாடு செய்கின்றனர். நவீன காலத்திற்கு தகுந்தாற் போன்று கால் சட்டை, மேலாடை அணிவித்த நிலையில் இந்நடுகல் காட்சியளிக்கின்றது.*



**முடிவுரை**

தமிழ் மறவர்கள் தங்களுடைய ஊரைப் பகைவர்களிடமிருந்து காப்பற்றவும் பகைவர்கள் ஆநிரை கவர்ந்த நிலையில் ஆநிரை கவர்ந்த பகைவர்களிடம் இருந்து மறவன் அல்லது மறவர்கள் ஆநிரைகளை மீட்டுப் போரில் வீர மரணம் அடைந்தனர். படை எடுத்துவரும் பகைவரிடம் இருந்து ஊரைக் காப்பாற்றிய பின்னர் வீர மரணம் எய்துகின்றான். அரசன் நலம் பெற மறவன் ஒருவன் உயிர் தியாகம் செய்கின்றான். இவ்வாறு உயிர் துறந்த வீரர்களுக்கு அவர்களைப் போற்றும் வகையில் பொது மக்களும் அரசனும் உறவினரும் நடுகல் எடுக்கின்றனர். அந்த நடுகல் அனைவராலும் வணங்கப்படுகிறது. காலங்காலமாக வழிபாட்டில் சில நடுகற்கள் இருந்து வருகின்றன. ஆகவே நடுகல் வழிபாடு தொன்று தொட்டு இந்த மண்ணில் நிலைத்து இருந்து வருகிறது. கணவன் உயிர்நீத்தால் அவனுடைய மனைவி அவனின்றி வாழக் கூடாது என்ற எண்ணத்தில் கணவனுடன் தீயில் பாய்ந்து தானும் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு உடன்கட்டை ஏறுதல் அல்லது தீய்ப்பாய்தல் என்று பெயர். இந்த இரண்டு வகைக் கற்களும் தமிழ்நாட்டில் ஆங்காங்குக் கிடைக்கின்றன. அவற்றையேல்லாம் ஆராய்ந்து வெளிகொணரும் போது தமிழர்களின் பண்பாட்டையும் நாகரிக வாழ்வியலையும் அறியும் வாய்ப்பாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க உதயேந்திரத்தில் இந்நடுகல் கிடைத்துள்ளது பண்பாட்டுப் பாதுகாவலாகத் திகழ்கிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. பாலசுப்பிரமணியன், கு. வே., புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.